செய்தி வெளியீடு எண்.575 நாள்.12.09.2007

செய்தி வெளியீடு

# பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை செயல்முறைக் கையேடு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 2007–08ஆம் ஆண்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க அனைத்து பேரூராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது குறித்து, ''பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை – செயல்முறை கையேடு'' எனும் நூல் பேரூராட்சி நிர்வாகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அறிவியல் முறையில் திடக்கழிவுகளை கையாளுதல் மற்றும் மேலாண்மை முறைகளை நெறிப்படுத்த பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், பேரூராட்சி பொறியாளர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய விதிமுறைகளுக்கேற்ப திடக்கழிவு பதனீடு மற்றும் புதைக்களம் தேர்வு செய்தல், வீட்டுக்கு வீடு மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்தல் மற்றும் மறுசுழற்சிக்கான வழிமுறைகள், திடக்கழிவு மேலாண்மை கையாளுதல் மற்றும் மேலாண்மை விதிகள் 2000ன் செயல் இலக்குகள், அறிக்கை சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் போன்றவைகள் குறித்த விவரங்கள் அடங்கியுள்ளன.

மேலும், இத்திட்டம் தொடர்பான புகைப்படங்களுடன் கூடிய மாதிரிகள், செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாத வழிமுறைகள், இத்திட்டத்தில் உபயோகிக்கும் கருவிகள் மற்றும் உபகரணங்களின் பயன்பாடுகள் ; பல்வேறு செயலாக்க வழிவகைகள்; மாதிரி புதைக்களம் போன்ற விபரங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி வீட்டுக்கு வீடு குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்கும் முறையினை இந்நிதி ஆண்டு முதல் அமுல்படுத்துதல் பேரூராட்சிகளின் தலையாய கடமையாகும். இதனை ஊக்கப்படுத்தும் விதமாக பணியாளர்களுக்கும், சுய உதவிக்குழுக்களுக்கும், குடியிருப்போர் நலச்சங்கங்கள் ஆகியோர்களுக்கும் போதிய பயிற்சி அளிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக, இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு முறைகள் மிகவும் உபயோகமாக அமையும். இந்த செயல்முறை கையேடு அனைத்துப் பேரூராட்சி செயல் அலுவவர்கள், பொறியாளர்கள், மற்றும் பொது நல ஆர்வலர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

பேரூராட்சிகளில் தற்போது செயல்பாட்டில் உள்ள அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற்றும் இதர திட்டங்கள் மூலம் மேம்பாடும் அடையும் இந்த வேளையில், இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி முறைகளை பின்பற்றி, தூய்மையுள்ள பேரூராட்சியே நம் பேரூராட்சி என்பதனை உறுதி செய்திட வேண்டும்.

இந்நூல் வெளியீட்டினை காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களை சேர்ந்த அச்சரப்பாக்கம், மாங்காடு, பெருங்களத்தூர், செம்பாக்கம், மாமல்லபுரம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி, போரூர் மற்றும் மீஞ்சூர் பேரூராட்சிகளின் மன்றத் தலைவர்கள் அனைத்து பேரூராட்சி மன்றத் தலைவர்கள் சார்பாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேரூராட்சிகளின் இயக்குநர் டாக்டர்.கே.கோபால், இ.ஆ.ப., மற்றும் பேரூராட்சிகளின் இயக்கக அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.